Registered as a Newspaper

பெண்மைக்குமெருகேற்றும் இளமைக்கு எழிலூட்டும் தரமான
தங்க நகைகளை
அளிப்பவர்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்நகர்.
தொலைபேசி: 23628

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை: ரூ. 1-25

அழகிய கலைநயம் மிக்க புதுமையான
22 KT
தங்க நகைகளை
ஆடர் செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
தொலைபேசி: 23628

சுடர்: 2 யாழ்ப்பாணம்: அக்ஷய ஸ்ரீ பங்குனி மீ 11 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1407 றஜப் பிறை 24 (25.03.1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 101

# டிசம்பர் 19 யோசனையை ஏற்க இலங்கை சம்மதம்

## தீர்வு தமிழருக்கு நீதிவழங்குவதாக இருக்க வேண்டும் என அறிவிப்பு

### ராஜீவ் நேற்று வெளியிட்ட தகவல்

புதுடில்லி, மார்ச் 25

இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமான 86 டிச. 19 யோசனைகளை அடிப்படையாக வைத்துப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க இலங்கை அரசாங்கம் சம்மதம் தெரிவித்திருக்கிறது: இதே வேளை, அந்தப் பிரச்சினை தொடர்பாக எடுக்கப்படும் எந்தத் தீர்வும் தமிழ் மக்களுக்கு நீதி வழங்குவதாக இருக்க வேண்டும் எனவும் நான் இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு அறிவித்து விட்டேன்.

இத்தகவல்களை இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி நேற்று வெளியிட்டார்.

ஆந்திர மாநிலத்தில் உள்ள ஸ்ரீஹரிகோட்டாவில் செய்மதி ஏவுதல் நிகழ்ச்சிக்குப் பின்னர் பிரதமர் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவரிடம் இலங்கை இனப் பிரச்சினை பற்றிக் கேட்கப்பட்டது.

அச்சமயம் அவர் சொன்னதாவது:

டிசம்பர் 19 யோசனைகளை இலங்கை ஏற்றுள்ளது.

இலங்கைத் தமிழர் பாதுகாப்பாகவும் பத்திரமாகவும் சுயமரியாதையுடனும் வாழ்வதற்கு இந்த யோசனை நல்ல அடிப்படையாக அமையக்கூடும்.

ஒன்றைச் சொல்வதையும், பின்னர் பின்வாங்குவதையும்தான் இலங்கை அரசு இதுகாலவரை செய்துவந்தது.

இப்போது 1986 டிசம்பர் 19இல் உருவாக்கப்பட்ட யோசனைகளை ஏற்று, அதனை ஆரம்பமாக வைத்துப் பேச்சு நடத்த சம்மதம் தெரிவித்துள்ளது.

இம்முறை தந்த உறுதிமொழியில் இலங்கை அரசு உறுதியாக இருக்கும் என்றே நான் நம்புகின்றேன்.

இலங்கை இனப்பிரச்சினை குறித்து எனது தலைமையிலான அரசாங்கம் கடந்த இரண்டு ஆண்டுகளாக வலுவான நிலையில்தான் உள்ளது.

அதில் எந்தவித மாற்றமும் இல்லை.

இனப் பிரச்சினைக்குக் காணப்படும் எந்தத் தீர்வும் தமிழருக்கு நீதி வழங்குவதாக இருக்க வேண்டும்.

இதை ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு நான் தெரிவித்து உள்ளேன்.

இப்படி பிரதமர் காந்தி செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இதனிடையில் இந்திய அமைச்சரவையின் வெளிவிவகார அரசியல் குழு கடந்த திங்கட்கிழமை காலையும் மாலையும் நீண்டநேரம் கூடி இலங்கை இனப் பிரச்சினை பற்றி ஆராய்ந்தது.

அதற்கு முன்னர்

(4ஆம் பக்கம் பார்க்க)

### 2 மாநிலங்களில் கம்யூனிஸ்ட் முன்னணியில்

புதுடில்லி, மார்ச் 25

கேரளா, மேற்கு வங்காளம், ஜம்மு—காஷ்மீர் சட்டசபைகளுக்கான தேர்தல் முடிவுகள் நேற்று மாலையில் இருந்து வெளிவரத் தொடங்கின.

கேரளாவில் இடதுசாரி ஜனநாயக முன்னணியும்,

ஜம்மு—காஷ்மீரில் தேசியப் பேரவைக் கட்சி—இந்திரா காங்கிரஸ் கூட்டணியும் முன்னணியில் நின்றன.

கேரளா—138

இடதுசாரி ஜனநாயக முன்னணி-57. ஐக்கிய ஜனநாயக முன்னணி-46.

ஜம்மு-காஷ்மீர்-76

தேசியப் பேரவைக் கட்சி-15. இந்திரா காங்கிரஸ்-8. பாரதீய ஜனதா கட்சி-2

மேற்கு வங்காளம் —294

இந்திரா காங்கிரஸ்-2.

இடதுசாரி ஐக்கிய முன்னணி - 9.

### கொழும்பு - யாழ் பஸ் கட்டணம் குறைக்கப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்-கொழும்பு தனியார் பஸ் கட்டணம் 25 ரூபா குறைக்கப்பட்டு 125ரூபா அறவிடப்படும்.

வட பிராந்திய மினி பஸ் சேவைச் சங்கத் தலைவர் திரு. பொன் மதிமுகராசா இதனைத் தெரிவித்துள்ளார்.

நேற்று மேற்படி சங்கக் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வேறு பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்கள் வருமாறு:-

* வட பிராந்திய மினி பஸ் சேவைச் சங்கத்துக்கு யாழ் நகரில் தனியான பஸ் நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

* பஸ் நிலையப் பகுதியில் மலசல கூட வசதிகள் வேண்டும். (இ-10)

### தாக்குதலுக்கு முன் நடந்த பைலா ஆட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

பைலாப் பாட்டுப் பாடி ஆடிய சிப்பாய்களே புலிகளின் தாக்குதலினால் கொல்லப்பட்டவர்களாவர்.

திங்கட்கிழமை அதிகாலை 1-20 மணி அளவில் பண்ணை பொலீஸ் விடுதிமீது விடுதலைப் புலிகள் நடத்திய பாய்ச்சலில் இவர்கள் மீதே முதல் தாக்குதல் தொடுக்கப்பட்டது.

தாக்குதலில் நிலைகுலைந்து சிதறி ஓடியவர்களில் சிலர் அங்குள்ள குசினிப் புகைக் கூடுகளுக்குள் மறைந்திருந்தனராம். (இ-10)





என்ன ராஜீவார் உப்பிடிச் சொல்லுறார்! இரண்டு நாளைக்கு முந்தித் தானே அச்சாணியார் டிச. 19 யோசனையைத் தாங்கள் ஏறெடுத்துப் பாக்கயில்லை எண்டு சொன்னவர்!!

பேச்சுப் பேச்சு…எல்லாம் போச்சுப் போச்சு எண்ட நிலைமை தானோ எங்களுக்கு……?

## எரிபொருள் கூப்பன்: என்ன செய்வது என்று தெரியாத நிலையில் செயலக அதிகாரிகள்!

யாழ்ப்பாணம், மார்ச் 25

கூப்பனுக்கு எரிபொருள் வழங்குவது பற்றிய அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பது தெரியாத நிலையில் யாழ் செயலகம் உள்ளது.

முன்னர் அறிவித்தபடி மூன்று இராணுவ முகாம்களுக்குச் சென்று எரிபொருள் கூப்பன்களைப் பெற்றுக்கொள்ளவான உரிமையாளர்களும் எரிபொருள் வர்த்தகர்களும் மறுத்துவிட்டனர்.

அதைத் தொடர்ந்து அரசாங்கத்தின் அடுத்த நடவடிக்கை என்ன என்பது யாழ் செயலக அதிகாரிகளுக்கு நேற்றுவரை கிடைக்கவில்லை.

இதனிடையில், கொழும்பு சென்றிருந்த யாழ் மாவட்ட இராணுவ இணைப்பு அதிகாரி கடந்த திங்கட்கிழமை தான் பலாலிக்கு மீண்டும் வந்து சேர்ந்தார் என்று தெரிகின்றது. (ஆ-ர)

## இன்றைய கட்டத்தில் பெரும் திருப்புமுனை

### பண்ணை பொலீஸ் விடுதி தாக்குதல் குறித்து ஈரோஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ் பண்ணை பொலீஸ் விடுதி மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய துணிகர வெற்றிகரமான தாக்குதல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி: இன்றைய நெருக்கடிக் கட்டத்தில் இது ஒரு திருப்புமுனை.

இப்படி ஈரோஸ் இயக்க யாழ்ப்பாணம் மாவட்டப் பொறுப்பாளர் பரா தெரிவித்தார்.

அண்மைக் காலமாக இலங்கை அரசு இராணுவ அடக்குமுறை நடவடிக்கைகளை அதிகரித்து வந்தது. தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி அகம்பாவப் பேச்சுக்களைப் பேசி வந்தார்.

இவற்றுக்குச் சரியான பதிலடியாக தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த திங்கள் அதிகாலை பண்ணை பொலீஸ் விடுதி மீது நடத்திய தாக்குதலும் 8 சிப்பாய்களை உயிருடன் சிறைப்பிடித்ததும் அமைந்து விட்டது.

விடுதலைப் புலிகளின் சிறந்த ஓர் இராணுவ நடவடிக்கையாக இத்தாக்குதல் அமைந்தது — இப்படி ஈரோஸ் யாழ்மாவட்டப் பொறுப்பாளர் பரா பாராட்டினார். (இ-ஏ)

## பெரும் சாதனை புரிய வேண்டும் என்பதே எமது நோக்கம்

### பண்ணைத் தாக்குதல் பெரிதல்ல

### மன்னார் தளபதி ராதா பேட்டி

— க. இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம் மார்ச் 25

யாழ். பண்ணை பொலீஸ் விடுதி தாக்கப்பட்டது-அங்கிருந்த சிப்பாய்கள் எட்டுப் பேரை கைது செய்தது எம்மைப் பொறுத்த வரையில் பெரியசாதனை அல்ல. இதைவிட இன்னும் பெரிய சாதனைகளைச் செய்யவேண்டும் என்பதே எமது நோக்கம் ஆகும்.

திங்கள் அதிகாலை பண்ணை பொலீஸ் விடுதி மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பங்கெடுத்த மன்னார் மாவட்ட விடுதலைப் புலிகளின் தளபதி ராதா இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

அடம்பனில் புலிகள் நடத்திய தாக்குதலில் தன்னை அர்ப்பணித்து பல சிப்பாய்களைக்கொன்றதுடன் இரண்டு சிப்பாய்களையும் கைது செய்து புலிகள் வரலாற்

(4ஆம் பக்கம் பார்க்க)

### திருடர்கள் கைவரிசை

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ் பொலீஸ் விடுதி மீது புலிகள் தாக்குதல் நடத்திய திங்கட்கிழமை இரவு சில திருடர்கள் யாழ் பஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள புத்தகக் கடை இரண்டில் தம் கைவரிசையைக் காட்டி உள்ளனர்.

சம்பந்தப்பட்ட புத்தகசாலைக் கட்டடத்தின் ஓட்டைப் பிரித்து இறங்கிய திருடர்கள் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பாடசாலை மாணவர் உபகரணங்களைக் களவாடிச் சென்றுள்ளனர். (இ-ஏ)

## வேம்படி மகளிர் கல்லூரி வழமை போல் இயங்குகிறது

### மாணவிகள் துணிவுக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 25

திங்கள் அதிகாலை இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வேம்படி மகளிர் கல்லூரி நேற்று வழமைபோல் இயங்கிக்கொண்டிருந்தது.

90 சதவீதமான மாணவிகள் நேற்று பாடசாலை வந்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

திங்கள் அதிகாலை 15க்கும் மேற்பட்ட ஷெல் குண்டுகள் வேம்படி மகளிர் கல்லூரியை சேதப்படுத்தி நாசப்படுத்தியிருந்தன.

இதனால் சுமார் 4லட்சம் ரூபா செறுமதியான

(4ஆம் பக்கம் பார்க்க)

### நகரில்ஏற்பட்ட பதற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ் கோட்டை முகாமில் இருந்து நேற்றும் ஷெல் தாக்குதல்களும் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன. இதனால் நகரில் பதற்றம் நிலவியது.

ஷெல் குண்டுகள் கொட்டடிப் பக்கமாகவும் புல்லுக்குளம் பக்கமாகவும் விழுந்து வெடித்தன. (இ-10)

## "இந்தியா ஈழப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும்"

# ஈழவர் முன்னணி நாளை ஆர்ப்பாட்டப் பேரணி

யாழ்ப்பாணம், மார்ச் 25

ஈழப் போராட்டத்தை இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டும், எனக் கோரி நாளை வியாழக்கிழமை ஈழவர் முன்னணி ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்துகிறது.

யாழ்நகர் நாச்சிமார் கோவிலடியில் இருந்து பேரணி ஆரம்பமாகி கச்சேரியடியில் முடிவடையும்.

நெருக்கடிமிக்க இன்றைய சூழலில், உக்கிரமாகமுன்னெடுக்கப்பட்டு வரும் ஈழப் போராட்டத்தின் தன்மையையும், தமிழ் பேசும் மக்களின் அடிப்படை அபிலாஷைகள் மீது அவர்கள் கொண்டுள்ள விடாப்பிடியான பற்றுதலையும் உணர்ந்துகொண்டு இந்திய அரசு ஈழப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும்.

ஆயுதம் தாங்கிப்போராடும் அமைப்புக்களே தமிழ் பேசும் மக்களின் நியாயமான அபிலாஷைகளைப் பிரதிபலிப்பவர்கள் என்பதை இந்தியா உணர்ந்துகொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகளுடன் பேரணி நடத்தப்படும்.

மேலும் தினமும் தொடரும் இராணுவத்தின் தாக்குதலுக்கும் அழிப்புக்கும் மத்தியில் அரசு கொண்டுவந்த அனைத்து நெடுபிடிகளையும் தூசெனத் தட்டி இலட்சியப்போரை முன்னெடுக்கும் உறுதியை உலகுக்கு எடுத்துக்காட்டவும் இப் பேரணியில் கலந்துகொள்ளும்படி அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படி ஈழவர் முன்னணி அறிக்கை ஒன்றில் கேட்டுள்ளது. (இ)

## அறுந்த மின் கம்பிகள் திருத்தப்படுகின்றன

### சில இடங்களில் இரவு நேர மின்வெட்டு அமுலில்

யாழ்ப்பாணம், மார்ச் 25

அறுந்துள்ள மின்கம்பிகளைத் திருத்தும் வேலைகள் மேற்கொள்ளப்படுவதால் யாழ் மாநகர எல்லைக்குள் சில பகுதிகளில் இரவு வேளைகளில் மின் விநியோகம் தடைப்படும்.

மின் பாவனையாளரை முற்றாக பாதிக்காத முறையில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படும் என்று இலங்கை மின்சாரசபையினர் அறிவித்திருக்கின்றனர்.

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் 11 கே.வி மின்கம்பிகள் அறுந்துள்ளதினால் தான் இத் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (இ-ஏ)

### வள்ளங்கள் மீது தாக்குதல்

முள்ளியவளை மார்ச் 25

முல்லைத்தீவு செம்மலைப் பகுதியில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற வள்ளங்கள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தினர்.

திங்கட்கிழமை இரவு நடந்த இச்சம்பவத்தில் ஒரு வள்ளம் எரிந்து போனதாகக் கூறப்படுகிறது (இ-93)

## ஏப்ரல் முதல் சீனி விநியோகம் மீண்டும் தனியாரிடம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம் சீனி விநியோகம் தனியாரிடம் மீண்டும் ஒப்படைக்கப்படும்.

கடந்த சில மாதங்களாக உணவுத் திணைக்களமே சீனி விநியோகத்தை மேற்கொண்டு வந்தது.

உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு எஸ். பத்குணம் இதனைத் தெரிவித்தார்.

இதுவரைகாலம் மூலம் சீனி குடாநாட்டுக்கு கொண்டுவரப்பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

இனி கூட்டுறவுச் சங்கங்கள் தமது கிளைகளுக்குத் தேவையான சீனியை கொழும்பிலிருந்து நேரடியாகப் பெற வேண்டும்.

இதற்கான சுற்று நிருபங்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. (இ-ஏ)

## இந்தியச் செய்மதி கடலில் வீழ்ந்தது!

ஹைதராபாத், மார்ச் 25

இந்தியா நேற்று விண்ணில் ஏவிய ஏ. எஸ். எல். வி. செய்மதியும் ரொக்கட்டும் கடலில் வீழ்ந்து அழிந்தன.

ரொக்கட் ஏவப்பட்ட 2 நிமிடங்கள் 41 விநாடிகளில் கோளாறு காரணமாக கடலில் வீழ்ந்தது. ரொக்கட்டுடன் இணைக்கப்பட்ட செய்மதியும் கடலில் வீழ்ந்தது.

இந்நிகழ்ச்சி குறித்து பிரதமர் ராஜீவ் காந்தி மக்களுக்கும் சிறப்பாக விஞ்ஞானிகளுக்கும் ஆறுதல் கூறினார்.

"தோல்வியைக் கண்டு மனம் தளரக்கூடாது. தோல்வியே வெற்றியின் முதற்படி. இது ஒரு தடங்கலே தவிர தோல்வி அல்ல"— என்று பிரதமர் சொன்னார்.

இந்திய விண்வெளித் தலைவர் திரு. யு. ஆர். ராவ் கருத்து வெளியிடுகையில்:

ஏ. எஸ். எல். வி. ரொக்கட் ஏவப்பட்டவுடன் முதலாவது கட்டம் சரியாக செயற்பட்டது. இரண்டாவது கட்டத்தில்தான் கோளாறு ஏற்பட்டது.

கடலில் வீழ்ந்த ரொக்கட்டையும் செய்மதியையும் திருப்பி எடுக்க அதிகம் செலவு ஏற்படும் ஆகவே, அவை திருப்பி எடுக்கப்படமாட்டா"— என்று சொன்னார். (இ-ஏ)

முன்வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்

### வீரமரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

திங்கட்கிழமை பண்ணை பொலீஸ் விடுதி மீது புலிகள் நடத்திய தாக்குதலில் காயம் அடைந்திருந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் நேற்று மரணம் அடைந்தார்.

இரண்டாவது லெப்டினன்ட் துரை என்பவரே வீரமரணமடைந்தவராவார்.

ஏற்கனவே ஒரு சம்பவத்தில் காயமடைந்திருந்த நல்லூரைச் சேர்ந்த அல்போன்ஸ் என்ற போராளி கடந்த 23 ஆம் திகதி வீரமரணமடைந்தார்.

22ஆம் திகதி அயாவிளான் பகுதியில் காவலில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்க வீரர் நாகு இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வீரமரணமடைந்தார்.

இவர்கள் அனைவருக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர் (இ-10)

### சுபநேரம்

25—03—1987 புதன்கிழமை

சுபநேரம்:

4-45 முதல் 6-15 வரை ராகுகாலம்:

12-15 முதல் 1-45 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

ஏகாதசி விரதம்

இளைய கலைமுறையின் இதயமாக வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

## தேவை

யாழ் மாவட்ட தேர்தல் தொகுதி அடிப்படையில் அனுபவமுள்ளவர்களிடமிருந்து விளம்பரம் சேகரிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பிணைப்பணம் செலுத்தக் கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் 28-3-87ஆந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விளம்பர எண் - 57, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

## சேவை

Hisex பிறவுண் சேவற் குஞ்சுகள் Hypeco வெள்ளை கறுப்பு பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி லொக்குவில்


## மக்கள் முகம்

### வீடமைப்பு அபிவிருத்திச் சங்கம்

வல்வெட்டித்துறை, மார்ச் 25

கற்கோவளம் வீடமைப்பு அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டமும் புதிய உத்தியோகத்தர்கள் தெரிவும் அண்மையில் மேற்படி சங்க மண்டபத்தில் நடைபெற்றன.

பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர்:- திரு ச. ஸ்ரீ லோலானந்தம் உபதலைவர்: திரு கு. சுப்பிரமணியம் செயலாளர்; திரு. ஆர். எஸ். வேலும்மயிலும் உபசெயலாளர்: திரு செ இராசதுரை பொருளாளர்: திரு. ஆ. ஜெயபாலசிங்கம் கணக்குப் பரிசோதகர்; செல்வி செல்வராணி

மேலும் ஐந்து பேர் கொண்ட நிர்வாக குழுவும் தெரிவாகியது.

(இ-160)

# அராலித்துறை ஊடாக பெரும் சிரமத்துடன்

## நடைபெறும் தபாற் சேவை

ஊர்காவற்றுறை, மார்ச் 25

பண்ணை ஊடாக பாதைப் போக்குவரத்து தடைப்பட்டதன் பின்னர் தீவுப்பகுதிக்குரிய தபால் விநியோகம் அராலி ஊடாகவே நடைபெற்று வருகின்றது தபால் பொதிகளை எடுத்துச் செல்லும் தபால் திணைக்கள ஊழியர்கள் அராலித்துறையில் பல சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

புங்குடுதீவு, வேலணை ஊர்காவற்றுறை ஆகிய இடங்களிலிருந்து சேகரித்த தபால்களை மூன்று ஊழியர்கள் யாழ்ப்பாண பிரதம தபால் நிலையத்திற்கு எடுத்துச் செல்வது வழக்கம்.

இவர்கள் இப்பிரயாணத்தின்போது தனியார் வாகனங்களிலும் வள்ளங்களிலும் இலவச பிரயாணத்தை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவதாகவே தெரிவிக்கப்படுகின்றது

இவ்வாறு ஒரே நாளில் பல வள்ளங்களில் மாறி மாறி பொதிகளை ஏற்ற வேண்டியுள்ளதாகவும் அத்துடன் பல மணி நேரம் அராலித்துறையில் செலவழிக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சில வள்ளக்காரர்கள் இந்த ஊழியர்களை உதாசீனம் செய்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(இ-16)

### இறங்குதுறை நிர்மாண வேலைகள்

ஊர்காற்றுறை, மார்ச் 25

கடந்த வருடம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தகாரர் ஒருவரிடம் கையளிக்கப்பட்ட ஊர்காவற்றுறை கண்ணகியம்மன் கோவிலடி இறங்குதுறை நிர்மாண வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

காரைநகர் கடற்படை முகாமிலிருக்கும் கடற்படையினரின் துப்பாக்கிப் பிரயோகம் காரணமாகவும் தீவுப்பகுதிகளுக்கு கட்டடப்பொருள்களை கொண்டுவருவதில் இருக்கும் தடை காரணமாகவும் நிறுத்தப் பட்டிருந்த நிர்மாண வேலை மீண்டும் ஆரம்பமாவது குறித்து மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-16)

## விளையாட்டரங்கு

### கழக அணிகள் போட்டி ஆரம்பம்

# சென்றலைட்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 25

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணிக்கெதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி 81 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

இந்த கிரிக்கெட் ஆட்டத்துடன் வடபகுதி விளையாட்டுக்கழக அணிகளுக்கிடையேயான இந்த வருட கிரிக்கெட் பருவகாலம் ஆரம்பமாகி உள்ளது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி ஒதுக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது

பி ராஜீவன் 67, கே. கலாவண்ணன் 42, டி. புரட்சிதாஸன் 35, எஸ். மகிவதனன் 20 ஓட்டங்களைப் பெற்றனர்.

பி. சசிதரன் 38 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக்களையும், பி மகேந்திரகுமார் 54 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணியால் 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 205 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது

பி பாலகுமார் ஆட்டமிழக்காமல் 36, பி சசிதரன் 32, பி. மகேந்திரகுமார் 27, எஸ் விமல்ராஜ் 27 ஓட்டங்களைப் பெற்றனர்.

எஸ் சுரேந்திரா 37 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இந்த ஆட்டம் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (இ-7)

### சோழன் இல்லம்

முள்ளியவளை, மார்ச் 25

கற்சிலைமடு கனிஷ்ட வித்தியாலயத்தில் நடந்த வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளில் சோழன் இல்லம் முதலாம் இடத்தையும், பாண்டியன் இல்லம் இரண்டாம் இடத்தையும், சேரன் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றன. (இ-93)

### சிவப்பிரகாச வித்தியாலயம் சாதனை

யாழ்ப்பாணம், மார்ச் 25

வட்டுக்கோட்டை வட்டாரப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற உடற்பயிற்சி, மெய்வல்லுநர் போட்டிகளில் சண்டிலிப்பாய் சிவப்பிரகாச மகா வித்தியாலயம் பெற்ற வெற்றிகள் வருமாறு:-

மெய்வல்லுநர் போட்டி

ஆண்கள்:- 17 பேர் 1 ஆம் இடங்கள், 19பேர் 2 ஆம் இடங்கள், 9 பேர் 3 ஆம் இடங்கள்.

பெண்கள்; 14 பேர் 1 ஆம் இடங்கள், 16பேர் 2 ஆம் இடங்கள், 8 பேர் 3 ஆம் இடங்கள்.

உடற்பயிற்சிப் போட்டிகள்

13 வயது ஆண் 1ஆம் இடம், 13 வயது பெண் 1 ஆம் இடம், 17 வயது ஆண் 1 ஆம் இடம், 17 வயது பெண் 2 ஆம் இடம். (இ)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

### கல்விஅதிகாரிக்குப் பாராட்டு

முள்ளியவளை மார்ச் 25

பலத்த சிரமத்தின் மத்தியில் முல்லைத்தீவுக்கு ஜீ சீ ஈ சாதாரணதரப் பத்திரப் பரீட்சை முடிவுகளைக் கொண்டுவந்து சேர்ப்பித்த மக்கள் கல்வி அதிகாரி திரு சிவானந்தத்தை மாணவரும் அதிபர்களும் வெகுவாகப் பாராட்டினர்.

முல்லைத்தீவு கல்வித் திணைக்கள கல்வி அதிகாரியான திரு. இ.சிவானந்தன் பரீட்சை முடிவுகளை எடுத்துக்கொண்டு கடந்த திங்கள் யாழ் நகரில் இருந்து முல்லைத்தீவுக்குப் புறப்பட்டார்.

செல்வபுரத்தில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக திரு சிவானந்தம் இயக்கச்சிவரை வந்து திரும்பி யாழ்நகர் சென்றார்.

அடுத்தநாள் மீண்டும் பரீட்சை முடிவுகளை எடுத்துக் கொண்டு செல்வபுரத்தின் ஊடாக வர திரு. சிவானந்தன் முயற்சித்தார்

செல்வபுரத்தில் இராணுவ நடமாட்டம் காணப்பட்டும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் திரு சிவானந்தன் பரீட்சை முடிவுகளை முல்லைத்தீவுக்குக் கொண்டு போய்ச் சகல பாடசாலைகளுக்கும் விநியோகித்தார். (எ-98)

## கதைகளில் போராட்டங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்

யாழ்ப்பாணம், மார்ச் 25

இன்றைய தமிழ் இனத்தின் போராட்டங்களையும் அவலங்களையும் வெளிக்காட்டும் சிறுகதைகளையும் கதைத் தொகுதி வெளியீடுகளில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

வைத்திய கலாநிதி எம் கே. முருகானந்தன் இவ்வாறு கூறினார்

டானியல் அன்ரனியின் 'வலை' சிறுகதைத் தொகுதி அறிமுக விமர்சன அரங்கு புலோலி மெதடிஸ் மிஷன் பாடசாலையில் யதார்த்த கலை இலக்கிய வட்டத்தினர் சார்பில் திரு து குலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

சிறப்புரையாற்றிய கலாநிதி முருகானந்தன் மேலும் பேசுகையில், டானியல் அன்ரனியின் சிறுகதைகள் யாழ்ப்பாண கடலோரக் தொழிலாளர் மக்களின் உயிர்த்துடிப்புள்ள வாழ்க்கையைச் சித்தரிக்கின்றன.

கடலோர மக்களின் வாழ்க்கை முறைகளை, சமூகக் கொடுமைகளை உணர்வு பூர்வமாக அறிவதற்கு இவரின் கதைகள் பெரிதும் உதவுகின்றன என்றார்.

திரு. செ யோகராசா தமது ஆய்வுரையில்- ஈழத்து முற்போக்கு இலக்கியகாரர்களின் வரட்டுத்தனமான படைப்புக்களிலிருந்து விலகி, முற்போக்கு விமர்சகர்களின் பார்வைக்கு அப்பால் நவீன இலக்கியங்களின் அழகிய அம்சங்களுக்கு தமது கதைகளில் அழுத்தம் கொடுத்துள்ளார் டானியல் அன்ரனி என்றார்.

குப்பிளான் ஐ. சண்முகன் லீலாரத்தினம், எஸ் கே. விக்கினேஸ்வரன், நந்தினி சேவியர் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (இ-எ)

## நித்திரையாக இருந்தேன்

## பாரிய சத்தத்துடன் ஷெல் வெடித்தது

### வைமன் வீதியில் தப்பியவர் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 25

நாம் நித்திரையில் இருந்த போது பாரிய சத்தத்துடன் குண்டு ஒன்று எமது அருகே வெடித்தது எழுந்து பார்த்த போது வீட்டின் வெளிப்பக்கம் உள்ள சீமெந்துக் கூரையை ஷெல் தாக்கி உடைத்திருந்தது.

திருமதி. பி. தர்மபாலன் இப்படித் தெரிவித்தார்.

இவரது வீடு நல்லூர் வைமன் வீதி ஒழுங்கையில் உள்ளது

சுண்டுக்குளி றக்கா வீதியில் உள்ள எட்மன் என்பரது வீட்டு முற்றத்திலும் "ஷெல்" விழுந்து வெடித்தது

நல்லூர், கோயில் வீதியில் உள்ள எஸ். பாக்கியநாதன் என்பவரது வீட்டு முற்றத்தில் விழுந்து வெடித்த 'ஷெல்'லினால் அவரது ஆடு படுகாயமடைந்தது.

இவரது வீட்டின் மூன் ஜன்னல் கண்ணாடியும் சேதமுற்றது

இந்த மூன்று இடங்களிலும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. (இ-7)

### புதிய முகாம்

கல்முனை, மார்ச் 25

திருக்கோவில் பிரதேசத்திலுள்ள சாகாமம் விவசாயப் பிரதேசத்தில் புதிதாகப் பொலிஸ் கமாண்டோக்கள் முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

போராளிகளினால் சேதமாக்கப்பட்ட சாகாமம் நீர்ப்பாசனத் திணைக்களக் கட்டடத்தை ஓரளவு சரிசெய்து கூடாரம் அடித்தே முகாம் அமைக்கப் பட்டிருக்கின்றது.

இங்குள்ள கமாண்டோக்கள் இனமும் காஞ்சரங்குடா சந்தியில் நின்று பிரயாணிகளைச் சோதனையிடுகின்றனர்.

(இ-84)

### மட்டக்களப்பு அம்பாறை நிலைமை

மட்டக்களப்பு, மார்ச் 25

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் ஆயுத படையினர் - போராளிகள் மோதல் கள் தற்போது ஓய்ந்துள்ள போதிலும் போராளிக் குழுக்களின் மோதல்கள் இடைக்கிடையே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆயுத படையினர் - போராளிகள் மோதல் ஜனவரி மாதம் கொக்கட்டிச் சோலையில்தான் இறுதியாக நடைபெற்றது.

இம் மோதலுக்கு பின்பு குறிப்பிடத்தக்க அளவு மோதல்கள் எதுவும் நடைபெறவில்லை.

இரு போராளிக் குழுக்கள் இடையிலான மோதல்கள் மண்டூர், பழுகாமம், இருதயபுரம், ஆரையம்பதி உட்பட சில பாகங்களில் நடைபெற்றுள்ளன (இ-21)

### சட்டவிரோத மின்சாரம்

வேலணை மார்ச், 25

தீவுப்பகுதியில் மீண்டும் சட்டவிரோத மின்சாரப் பாவனை தலைதூக்கியுள்ளது

தற்பொழுது உள்ள எரிபொருள் தட்டுப்பாட்டை கருத்தில் கொண்டு பலர் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்று வருகின்றார்கள்.

(இ-167)

## துறவிகளுக்கு தொண்டு செய்யும் பண்பு ஆயிரத்தில் ஒருவருக்கே உண்டு

யாழ்ப்பாணம், மார்ச் 25

இல்லறத்திலிருந்து கொண்டு துறவிகளுக்கு தொண்டு செய்யும்பண்பு ஆயிரத்தில் ஒருவருக்கே உண்டு.

சரம்பன் ஆ. சபாரத்தினம் இவ்வாறு கூறினார்.

கரம்பன் குருமடத்தின் ஸ்தாபகர் தினத்தையொட்டி நிகழ்ந்த விசேஷ பிரார்த்தனை நற்சிந்தனையின் போது குருமடத் தொண்டர் சபையின் சார்பில் அவர் உரையாற்றினர்.

அவர் மேலும் உரையாற்றுகையில் திருவாளர் அந்தோனிப்பிள்ளை துறவிகளுக்கென இக்குருமடத்தை ஸ்தாபித்தார். தமது குருநாதர் பெயரால் நல்லோருக்கு புகலிடமாக இதனை அமைத்து வளர்த்தார்

இன்று இங்கே வெளி நாட்டிலிருந்தும் பலர் வந்து ஆன்மீக வாழ்வில் முன்னேறிச் செல்கின்றனர்

இம்மடம் மேலும் ஓர் ஆல விருட்சம்போல் செழித்து வளரவேண்டும் என்றார்.

திருவாசகம், பட்டினத்தார் பாடல்களும் இசையுடன் பாடப்பட்டன.

(இ-எ)

## வவுணதீவில் இடம் பெயர்ந்தோர் உடைமைகளை எடுத்துவர அனுமதி

மட்டக்களப்பு, மார்ச் 25

வவுணதீவு ஆயுதப் படை முகாம் எதிரொலியாக அப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்துள்ள குடும்பங்கள் தமது உடைமைகளை சென்று எடுத்துவர இணைப்பதிகாரி அனுமதி அளிக்க சம்மதித்துள்ளார்.

கடந்த 6 மாதகாலமாக வவுணதீவு கிராமவாசிகளின் 165 குடும்பங்கள் அகதிகளாக சச்சந்திவு பாடசாலையில் தங்கியுள்ளன

இக்கிராம வாசிகள் மீண்டும் குடியேற அனுமதி மறுக்கப்பட்டுள்ளதால் உடைமைகளையாவது எடுத்துவர அனுமதி அளிக்குமாறு பிரஜைகள் குழுவினர் இணைப்பதிகாரி திரு. கமிந்டி சில்வாவை சந்தித்து வலியுறுத்தினார்கள்.

குடியிருப்பாளர்கள் 10 பேர் கொண்ட குழுக்களாகச் சென்று தமது உடைமைகளை எடுத்து வர அனுமதி அளிப்பதாக இணைப்பதிகாரி தெரிவித்தார். (இ-21)

## காருண்யமும் சேவை மனப்பான்மையும் உயர்ந்த பண்புகள்

இளவாலை, மார்ச் 25

காருண்யமும் சேவை மனப்பான்மையும் மனிதனுக்குரிய உயர்ந்த பண்புகள்.

இளவாலை றோ. க. த. ஆண்கள் வித்தியாலயத்தின் பேடன் பவல்தின விழா நடைபெற்றது.

பிரதம விருந்தினராகப் பங்குபற்றிய சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் செல்வி. சாந்தி சுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினார்.

காங்கேசன்துறை சாரணர் மாவட்ட ஆணையாளர் திரு. என். போஜன் பேடன்போ சாரணியத்தின் வரலாறு பற்றிப் பேசினார்.

சிறப்பு விருந்தினராக அருள் திரு அ. இராசநாயகம் அடிகள், அருள் திரு மை.ரீ. சுற்றிக் அடிகள் ஆகியோர் சமூக மளித்து உரையாற்றினார்கள்.

ஆணையாளர் குருளைச் சாரணியருக்குச் சான்றிதழ்கள் வழங்கினார்.

சாரணியரின் கலை நிகழ்ச்சிகளும் நிகழ்ந்தன. செல்வி சரோஜினி நன்றி கூறினார் (இ-48)

### கருத்தரங்கு

திருநெல்வேலி, மார்ச் 25

திருநெல்வேலி காளிகோவிலடி அம்பாள் சனசமூகத்தினரின் ஆதரவில் நடைபெற்ற கருத்தரங்கில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் பிரசாரப் பிரிவுப் பொறுப்பாளர் சண்டிரன் கலந்து கொண்டார்.

இன்றைய நிலையில் மக்களின் பங்களிப்பு பற்றியும், மூதறவிக் குழுக்கள் மக்கள் மத்தியில் இருப்பதால் உயிராபத்தை தடுக்கலாம் என்பது பற்றியும் அவர் உரையாற்றினார் (இ-ரி)

### சமாதான நீதிவான்

பொலிகண்டியைச் சேர்ந்த திரு. முருகுப்பிள்ளை சின்னத்துரை யாழ் நீதி மாவட்டத்துக்கான சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். நீதிவான் திரு. வி. சிதம்பரநாதன் முன்னிலையில் இவரது நியமன உறுதிப்பாடு நிறைவேற்றப்பட்டது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவரான இவர் ... வி. மாவட்ட அலுவலக எழுதுவினைஞராக கடமையாற்றியவர். (இ-


### 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 16-1-1921

மறைவு: 21-3-1985

திரு. வல்லிபுரம் குமாரசுவாமி

இளைப்பாறிய ஆசிரியர்

(யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை.)

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

-- மனைவி, பிள்ளைகள்.



## வாடகைக்குத் தேவை

யாழ் நகர் பஸ்நிலையத்திலிருந்து 2½ மைல் சுற்றளவுக்குள் 3000 சதுர அடிக்குக் குறையாத விஸ்தீரணமும் மின்சாரம், குழாய்த்தண்ணீர் வசதிகளும் கொண்ட அலுவலகமாக பாவிக்கக்கூடிய வீடு கடனடியாகத் தேவைப்படுகிறது.

விபரங்களுடன் யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கவும்.

ந கனகசபை

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

யாழ்ப்பாணம்.



A/L 89 பிரிவு II (விஞ்ஞான பாடங்கள்)

ஆரம்பம்:- 28-03-87 சனிக்கிழமை காலை 7.30 மணி (எமது வழமையான ஆசிரியர் குழுவினால்)

# NEW MASTER INSTITUTE

B.M.C. LANE, JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

உண்மை பேசுங்கள். கோபத்தை விடுங்கள், கேட்டால் சிறு உதவி என்றாலும் செய்யுங்கள். இந்த மூன்று வழிகளும் உங்களைக் கடவுளின் அருகே கொண்டு செல்லும்.

— கௌதம புத்தர்


உதயன்

இல. 15, கஸ்தூரியார் வீதி மின்சார நிலைய வீதி, தொலைபேசி: 24805 22078

யாழ்ப்பாணம் 25-03-1987 உ.செ இல. 88


## சில்வாவின் துணிச்சல்

இலங்கை இனப்பிரச்சினையை சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்த்துவைக்க இந்தியா மீண்டும் முயற்சிசெய்து வருவதாகத் தெரிகிறது.

தான் விதித்த மூன்று நிபந்தனைகளை ஸ்ரீலங்கா அரசு நிறைவேற்றும்வரை, தனது மத்தியஸ்தப் பணியிலிருந்து தற்காலிகமாக விலகி நிற்கப்போவதாக இந்தியா பெப்ரவரியில் அறிவித்திருந்தது.

ஆனால் ஸ்ரீலங்கா இதுவரை இந்திய நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டுள்ள தாகத் தகவல் இல்லை.

எது எப்படியோ, இனப்பிரச்சினை விவகாரத்தில் ஸ்ரீலங்கா — இந்திய உறவுகள் மென்மையானவையாக இல்லை என்பது சர்வ நிச்சயம்.

இந்தியாவை 'ஏய்'க் காட்டி, ஏமாற்றித் தனது காரியத்தை அதாவது தமிழ் மக்களை அடக்கி ஆளும் எண்ணத்தை நிறைவேற்றி விடலாம் என்று ஸ்ரீலங்கா அரசு மனப்பால் குடிக்கிறது. ஆனால் இந்தியா அந்தளவுக்கு முட்டாள் அல்ல என்பது உலகத்துக்குத் தெரியும்.

இலங்கையைவிட பல படிகள் உயரப் பாயும் வல்லமையும் சக்தியும் இந்தியாவுக்கு உண்டு. அதனை இலங்கை அரசு உணரத் தவறுவது அதனைப் பிடித்துள்ள சனிதோஷம்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில்—பின்னணியில் தென்னிலங்கையைச் சேர்ந்த அரசியல் பிரமுகர் திரு. கே. பி. சில்வா இலங்கை—இந்திய உறவு குறித்துப் பிரஸ்தாபித்திருக்கிறார்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் 13 ஆவது தேசிய மாநாட்டை கொழும்பில் ஆரம்பித்துவைத்து திரு. சில்வா உரையாற்றினார்.

இந்தியாவின் நல்லெண்ண முயற்சிகள் பாதிப்படைந்துள்ளன. அதுமட்டுமா? அபாயகரமான, நெருக்கடியான சூழ்நிலையும் தோன்றி உள்ளது. இரு நாடுகளுக்கும் இடையில் உள்ள உறவில் நஞ்சைக் கலக்க ஏகாதிபத்தியவாதிகள் முயற்சிக்கின்றனர். இதற்கான முயற்சிகள் சர்வதேச அரங்கில் நடந்து கொண்டிருக்கின்றன. இதன்மூலம் அந்தச் சக்திகள் தமது இராணுவத் தளத்தை இங்கு ஸ்தாபிக்க முற்பட்டுள்ளன. இத்தகைய நிலை உருவானால் இலங்கையின் இறைமை இழக்கப்படும்—என்று திரு. சில்வா தெரிவித்திருக்கிறார்.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணமுடியாது. அரசியல் தீர்வே சாத்தியம். பிரதேச சுயாட்சி அடிப்படையில் அது மிகவும் சாத்தியம் என்றும் திரு. சில்வா மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றே சாத்தியமானது என்பதைத் தென்னிலங்கையில் உள்ள பல அரசியல் தலைவர்கள் உணர்கிறார்கள். வெளிப்படையாகவும் சொல்கிறார்கள்.

ஏன், ஆளுங்கட்சியில் உள்ள பலரும், அண்மைக் காலத்தில் அதனைச் சரியாக உணரத் தலைப்பட்டுள்ளனர். ஆனால் அவர்கள் தமிழர்களின் நியாயமான உரிமைகளை உதாசீனம் செய்து, தமக்கு விருப்பியவாறு அரசியல் தீர்வு காண விரும்புகிறார்கள்.

அரசியல் தீர்வு பற்றிப் பிரஸ்தாபிக்கும் ஏனைய தென்னிலங்கை அரசியல்வாதிகளாயினும் சரி, புத்திஜீவிகளாயினும் சரி தமிழர்களுக்கு உகந்த — அவர்களது அபிலாஷைகளை நிறைவேற்றும் — உரிமைகளை நிலைநாட்டும் தீர்வு எதையும் முன் வைப்பதாக இல்லை. சிலர் உகந்த நல்ல தீர்வு எது என்பதைத் தெரிந்து கொண்டும், தமது அரசியல், சுயலாபங்களைக் கருதி அவற்றை வெளியிடப் பயப்படுகிறார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் திரு சில்வாவும் அவரது கட்சியும் பிரதேச சுயாட்சி குறித்துத் துணிந்து சொல்வது பாராட்டத்தக்கதாகும். சுயாட்சி என்பது தமிழர்களுக்கு என்று ஒரு தாயகம் இருந்தால்தான் சாத்தியம்.

தமிழர் தாயகத்தை ஏற்றுக் கொள்வதற்கு அரசு விடாப்பிடியாக மறுத்து வருகிறது. விருதுக்கு வேட்டையாடும் போக்கில் தமிழர் தாயகத்தை அங்கீகரிக்க மறுக்கிறது.

அரசியல் தீர்வு வேண்டும் என்று ஆசைப்படும் தென்னிலங்கை அரசியல்வாதிகள், பிரமுகர்கள், புத்திஜீவிகள் என்போர் தமிழர் தாயகம், சுயாட்சி ஆகிய இரண்டும் இல்லாமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு இல்லை என்பது குறித்து ஒரே குரலில் அரசாங்கத்துக்கு இடித்துரைக்க வேண்டும்.

அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் அல்லவா?

## கல்வி டிப்ளோமா வகுப்புகளை யாழ்ப்பாணத்தில் நடத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 25

திறந்த பல்கலைக்கழக பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா வகுப்புகளை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு திறந்த பல்கலைக்கழக உபவேந்தருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் திறந்த பல்கலைக்கழக பட்டப் படிப்பு கல்வி டிப்ளோமா மாணவர்களே இக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்கள்.

இன்று எமது பிரதேசத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக எம்மால் எதை

(4-ஆம் பக்கம் பார்க்க)

### ஆலயத்துக்கு எம். ஜி. ஆர். அன்பளிப்பு

சென்னை, மார்ச் 24

பம்பாயில் உள்ள திருச்செம்பூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலயத்துக்கு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் யானைக்குட்டி ஒன்றைப் பரிசளித்தார்.

மகாராஷ்டிர வீடமைப்பு அமைச்சர் திரு. சுப்பிரமணியத்தின் வேண்டுகோளுக்கு இணங்க யானைக்குட்டி அன்பளிக்கப்பட்டது. (ஓ-எ)

### இராஜினாமா

பொன், மார்ச் 24

மேற்கு ஜேர்மனியின் பிரபல அரசியல்வாதியான வில்லிபிராண்ட் எதிர் கட்சியான சோசலிச ஜனநாயகக் கட்சியின் தலைமைப்பதவியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார்.

கட்சியின் முக்கிய பதவியொன்றுக்கு இரேக்கப் பெண்ணொருவரை நியமித்தது தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சையைத் தொடர்ந்தே இந்த ராஜினாமா வாகும். (ஓ)

# இந்தியச் செய்மதி வெற்றிகர ஏவுதல்

ஹைதராபாத், மார்ச் 24

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதலாவது அதிக சக்திமிக்க செய்மதி செலுத்தும் கலமான ஏ. எஸ். எல். வி. இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் சரியாக 12 மணி 9 நிமிடத்திற்கு ஆந்திராபிரதேசத்தில் உள்ள விண்வெளி ஆய்வுநிறுவன நிலையமான ஸ்ரீஹரிகோத்தாவிலிருந்து வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

பெரும் சத்தத்துடன் மஞ்சள் சுவாலை கக்கிய படி உயரக் கிளம்பிய ஏ. எஸ். எல். வி. யிலிருந்து சுமார் 9 நிமிடங்களில் ரோகினி செய்மதி பிரிந்து கொண்டது.

ஸ்ரீஹரிகோத்தா, திருவனந்தபுரம் ஆகிய விண்வெளி ஆய்வு நிலையங்கள் ரோகினி செய்மதியைக் கண்காணிக்கின்றன.

விண்வெளிக்கு ஏ. எஸ். எல். வியை அனுப்பும் முதலாவது கட்டத்தில் வெற்றிகரமாக இயங்கியதென்றும், சகல பகுதிகளும் நன்றாக இயங்கின என்றும் ஸ்ரீஹரிகோத்தா ஆய்வு நிலையம் தெரிவித்தது.

ஏ. எஸ். எல். வி. வெற்றிகரமாக செலுத்தப்பட்டதன் மூலம் இந்தியா சாதனையொன்றை விண்வெளித் தொழில் நுட்பத்தில் நிலைநாட்டியுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் ராஜீவ் காந்தி, ஆந்திரா ஆளுனர் ஜோஷி, ஆந்திரா முதல்வர் என். டி. ராமராவ், விண்வெளி ஆய்வு கழக தலைவர் ஆர். யு. ராவ் ஆகியோர் செய்மதிக் கோள் கட்டுப்பாட்டு அறையிலிருந்து நேரடியாகப் பார்வையிட்டனர். (ஓ)

### பாக். பிராந்தியத்தில் ஆப். விமானத் தாக்குதல்

இஸ்லாமபாத் மார்ச் 24

பாகிஸ்தான் பிராந்தியத்தினுள் இருதடவைகள் ஆப்கானிஸ்தான் போர்விமானங்கள் ஊடுருவி தாக்குதல்களை மேற்கொண்டன.

இத்தாக்குதல்களினால் 70 பேர் மரணமானார்கள். 145 பேர் காயங்களுடன் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டனர்.

பத்துக்கும் அதிகமான போர் விமானங்கள் இத்தாக்குதலை நடத்தியதாக பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

நான்குமணி நேரத் தாக்குதல்களில் 16 பாரிய கட்டடங்கள் தரைமட்டமாகின. கடைத்தொகுதி ஒன்று தீக்கிரையானதில் நாற்பது சிறுகடைகள் முற்றாக சேதமடைந்தன.

கடந்த மாதமும் இதே பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல்களால் 90 பேர் மரணமாகினர்.

இதே சமயம் ஆப்கான் கிளர்ச்சிக் கெரில்லாக்கள் வாழும் பாகிஸ்தான் எல்லைப் பகுதியை தமது போர் விமானங்கள் சேதப்படுத்தி 200க்கும் அதிகமான கெரில்லாக்களை பலியாக்கியதாக காபூல் அறிக்கை விட்டுள்ளது. (ஓ)

### வெளி உலகில்

## அமெரிக்காவுக்கு லிபியா எச்சரிக்கை

திரிபொலி, மார்ச் 24

அமெரிக்கா தனது ஆக்கிரமிப்பைத்தொடர்ந்தால் தமது நாடு வார்ஸா உடன்படிக்கையில் சேர நேரிடும்.

இவ்வாறு லிபியா ஜனாதிபதி கேர்ணல் கடாபி எச்சரித்தார்.

தமது நாட்டின் கரையோரத்தில் ரஷ்ய ஏவுகணைகளை நிலைநிறுத்த அனுமதி வழங்கப்போவதாகவும் கடாபி தெரிவித்தார். (ஓ

## படைகளை அகற்றுமாறு சூடான் அறிக்கை

கார்ட்டும், மார்ச் 24

சூடானில் சட்டங்களுக்கு பாதகமான வகையில் லிபியா நடந்து கொள்கின்றது.

இவ்வாறு சூடானிய பிரதமர் சகிகா மார்ட்டி லிபியாவுக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தார்.

சாட் மீது லிபியா மேற்கொள்ளும் சகல தாக்குதல் நடவடிக்கைகளுக்கும் சூடான் பிராந்தியமே நிலைக்களனாது ஆத்திரமூட்டும் செயலாகும். லிபியா இப்போக்கினைத் தவிர்க்காவிடில் சூடான் போர் தொடுக்கும் அபாயநிலை உருவாகவேண்டிவரும்

சூடானில் நிலைகொண்டுள்ள சகல லிபியாத் துருப்புக்களையும் தமது பகுதிகளுக்குள் திரும்பி விடுமாறு பலதடவைகள் எச்சரிக்கப்பட்டபோதிலும் லிபியா அதனை கவனத்தில் கொள்ளவில்லை. சுமார் 700க்கும் 1000த்திற்கும் இடைப்பட்ட லிபியாத் துருப்புக்கள் கடந்த ஜனவரி முதல் சூடானில் வடமேற்குப் பகுதிகளில் நிலைகொண்டுள்ளன.

இதனால் சூடான் லிபியா மீது யுத்தம் நடத்தவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகிவருவது கவலைதருவதாகவுள்ளது. (ஓ)

## மோஹன்தாஸ் இப்போது ஆஸ்பத்திரியில்

### அரசு பரிசிலனை செய்கிறது

சென்னை, மார்ச் 25

விடுமுறையில் உள்ள தமிழ்நாடு முன்னாள் பொலிஸ் ஆணையாளர் திரு. கே. மோஹன்தாஸ் சென்னை தனியார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஆணையாளர் பதவியில் இருந்து வேறு பதவிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, திரு. மோஹன்தாஸ் சுகயீன விடுமுறையில் சென்றார்.

வைத்தியக் குழுவின் பரிசோதனைக்கு ஆஜராகும்படி தமிழ்நாடு அரசு அவருக்குப் பின்னர் உத்தரவு இட்டது.

அதைத் தொடர்ந்து புதிய பதவியை சென்ற 18ஆம் திகதி ஏற்கப் போவதாக திரு. மோஹன்தாஸ் அறிவித்தார். அதன் பின்னர் வெளிநாடான 'ரொங்கோ' செல்ல தமிழ் நாடு அரசுக்கு விண்ணப்பித்தார்.

இந்த விண்ணப்பமும் நிராகரிக்கப்பட்டது.

இப்போது நெஞ்சு வலி என்று தனியார் ஆஸ்பத்திரியில் தன்னை அனுமதித்துக் கொண்டார்.

இதற்கு தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியுள்ளதா என்று கேட்கப்பட்டபோது, 'விஷயம் இன்னும் பரிசீலனையில் உள்ளது' என்று அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஓ-எ)

### பொய்யாமொழி



குறள்:

பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர்

பொருள்:

நுட்பமாக உணர்ந்து நிறைந்த கேள்வி அறிவை உடையவர், (ஒருகால் பொருள் களைந்து) தவறாக உணர்ந்திருந்தாலும் பேதைமையானவற்றைச் சொல்லார்

# இலங்கை - இந்திய உறவைக் கெடுக்க

## ஏகாதிபத்தியச் சக்திகள் முயற்சி

### கம்யூனிஸ்ட் கட்சி எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 25

இனப்பிரச்சினையை வைத்து இலங்கை- இந்திய உறவில் நஞ்சைக் கலப்பதற்கு ஏகாதிபத்திய சக்திகள் ஈடுபட்டுள்ளன.

இதற்கான முயற்சிகள் சர்வதேச அரங்கில் இடம் பெற்று வருகின்றன.

இது குறித்து இலங்கை எச்சரிக்கையாக இருக்க வேண்டும்—

இப்படி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. கே. பி. சில்வா தெரிவித்தார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் 13ஆவது தேசிய மாநாட்டைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் திரு. சில்வா இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு ஷாலிமா மண்டபத்தில் இம்மாநாடு கடந்த ஞாயிறு ஆரம்பமானது.

லங்கா சமசமாஜக் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஆகியவற்றின் தலைவர்களும் உலக கம்யூனிஸ்ட் இயக்கங்களின் பிரதிநிதிகளும் முதல் நாள் விழாவில் கலந்து கொண்டனர்.

ஏகாதிபத்திய சக்திகள் இனப்பிரச்சினையைப் பயன்படுத்தி இராணுவ தளம் ஒன்றை இங்கு அமைக்க முயற்சிக்கின்றன.

இதற்கு இடமளிப்போமேயானால் இலங்கையின் இறைமை, சுதந்திரம் அழிந்து போகும். தமிழரின் ஒத்துழைப்பை பயமுறுத்தல் மூலம் நாம் பெறமுடியாது அவர்களின் உரிமைகளை மதித்து வழங்குவதன் மூலம் அவர்களின் ஒத்துழைப்பைப் பெற முடியும்.

பிரதேச சுயாட்சி அடிப்படையில் ஐக்கிய இலங்கை என்ற வரையறைக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முடியாது அதில் நம்பிக்கை வைப்போமானால் நாடு அதல பாதாளத்தில் விழும்.

இந்திய மத்தியஸ்த உதவியைப் பயன்படுத்தி சகல அமைப்புக்களும் இலங்கை அரசும் பேச்சுக்கள் மூலம் தீர்வு காண முன்வர வேண்டும்.

இப்படி திரு. சில்வா தனது தொடக்கவுரையில் கூறினார். (இ-எ)

## ஊத்தரவுபெற்ற வியாபாரிகள் மூலம் எரிபொருளை விநியோகிக்குக

### உதவி அரசாங்க அதிபரிடம் மகஜர்

உடுப்பிட்டி, மார்ச் 25

இராணுவ நிர்வாகத்தின் கீழ எரிபொருள் விநியோகிக்கும் திட்டத்தைக் கைவிட்டு உத்தரவு பெற்ற வியாபாரிகள் மூலம் எரிபொருளை விநியோகிக்க வேண்டும்.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் தடையையும் பொருளாதாரத் தடையையும் ஆட்சேபித்து நெல்லியடியில் நடந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் முடிவிலேயே இந்த மகஜர் கையளிக்கப்பட்டது.

மகஜரைப் பெற்றுக் கொண்டு அங்கு கூடியிருந்த மக்கள் முன் உரையாற்றிய உதவி அரசாங்க அதிபர் இங்கு விவசாயிகள் தொடக்கம் பாட்டாளி மக்கள் வரை, பள்ளி மாணவர் தொடக்கம் அரசாங்க உத்தியோகத்தர் வரை எல்லோரும் அனுபவிக்கும் கஷ்டங்களைத் தாம் உணர்ந்துள்ளதாகக் கூறினார்.

திரு. இராஜேந்திரா ஊர்வலத்தின் முடிவில் அங்கு குழுமியிருந்த மக்கள் முன் உரையாற்றுகையில் இன்று அரசாங்கம் எரிபொருளை இராணுவ முகாம்களில் விநியோகிக்க ஏற்பாடு செய்துள்ளது. இது எமது அப்பாவி மக்களைக் கொலை செய்ய நல்ல தருணமாக அமைந்துவிடும்.

எனவே இந்த எரிபொருள் விநியோகத்தை எதிர்த்து நாம் போராட வேண்டும். முன்புபோல் வியாபார நிலையங்களில் எரிபொருளை பெறுவதற்கு வழிசெய்ய வேண்டும்.

நாம் உலக நாடுகளுடன் தொடர்பு கொண்டு வடபகுதிக்கு இலங்கை அரசு ஏற்படுத்தியுள்ள பொருளாதாரத் தடைபோல் இலங்கை அரசிற்கும் பொருளாதாரத் தடையை ஏற்படுத்த வேண்டும் என்றார். (இ-157)

### சமய சந்நிதிகளில்

### திருவாசக முற்றோதல்

சாவகச்சேரி, மார்ச் 25

நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் வேண்டி சாவகச்சேரி சைவமகா சபையினரால் பிரதி போயா தினமும் நடத்தப்பட்டுவரும் திருவாசக முற்றோதல் நிகழ்ச்சி மட்டுவில் வடக்கு இராமாவில் விநாயகர் ஆலயத்தில் இம்முறையும் இடம் பெற்றது. (இ-81)

## குறைந்த செலவில் சிறந்த தொழில் நுட்பக் கல்வி

வல்வெட்டித்துறை, மார்ச் 25

மிகவும் குறைந்த செலவில் சிறந்த தொழிற் கல்வி பயில இங்கு அமைக்கப்பட்டதொழிற் கல்லூரியை நீங்கள் பயன்படுத்த வேண்டும்.

தேவரையாளி இந்துக் கல்லூரியில் முழு நேரத் தொழில் நுட்பப் பிரிவு ஆதாரப் பத்திரம் வழங்கும் வைபவம் நடைபெற்றது.

உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வி கே சுகரபாதம் மேற்கண்டவாறு கூறினார்

அதிபர் திரு. எ. இரத்தினசபாபதி தலைமையில் வைபவம் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக திரு. வி. தங்கராஜா கலந்து கொண்டார்.

மற்றும் திரு சி புலேந்திரன் திரு பொன் கனேசமூர்த்தி திரு. வி. சந்திரசேகரம் திரு எஸ் சிவசாந்தராஜ் திரு. ரி. வீரசிங்கம் திரு சி. திரவியம் திரு. கே குணசிங்கம் ஆகியோரும் பங்குபற்றினர். (இ-160)

### முதலுதவி வகுப்புகள்

யாழ்ப்பாணம், மார்ச் 25

தீவுப்பகுதி செஞ். ஜோன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவு, புங்குடுதீவு, அனலைதீவு ஆகிய இடங்களில் புதிய முதலுதவி வகுப்புக்களை நடத்தி வருகின்றது.

அனலைதீவில் நடைபெறும் வகுப்புகளுக்கு டாக்டர் சர்வானந்தாவும், புங்குடுதீவில் நடைபெறும் வகுப்புகளுக்கு படை உத்தியோகத்தர்களாக செல்வி ஆ. ரஞ்சிதமலர் யோகேஸ்வரி ஆகியோரும் முதலுதவிப் பயிற்சியை அளித்து வருகின்றனர். (இ-7)

### மட்டக்களப்பில் சுகாதார மதிப்பீடு

கல்முனை, மார்ச் 25

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுகாதார மதிப்பீடு செய்யப்படவிருக்கின்றது.

இதில் ஈடுபடுவதற்கு ஒவ்வொரு உதவி அரச அதிபர் பிரிவிலிருந்தும் தொண்டர்களைத் தெரிவு செய்து மட்டக்களப்பு கச்சேரியில் இரண்டு தினங்கள் பயிற்சிகள் அளிக்கப்பட இருக்கின்றன

இப்பயிற்சியில் ஈடுபட்ட தொண்டர்கள் வீடு வீடாகச் சென்று கேள்விக் கொத்துக்களில் உள்ள விபரங்களைச் சேகரிப்பர். (இ-87)

### அலவன்ஸ்

வேலணை, மார்ச், 25

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு 102 ரூபா அலவன்ஸ் வழங்கப்பட இருப்பதாக தெரியவருகின்றது. (இ-167)

### வாசகர் திருமுகம்

## பயணிகளை ஏற்றாத பஸ்கள் யாருக்காக?

காரைநகரில் இருந்து வவுனியா அனுராதபுரம் ஆகிய இடங்களுக்கு பஸ் சேவைகள் நடைபெறுகின்றன. இப் பஸ்கள் அடிக்கடி பழுதடைந்து இடைநடுவில் நின்று விடுகின்றன.

மக்களாகிய நாம் தூர இடங்களுக்கு செல்வதற்கு இந்த சாலையின் பஸ்களையே நம்பியிருக்கின்றோம்.

எனவே எமக்கு நல்ல தடங்கல் இல்லாத தரமான பஸ் சேவை கிடைக்க போக்குவரத்துச் சபை உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் அத்துடன் பஸ் பழுதடைந்தால் சில சந்தர்ப்பங்களில் வேறு சாலை பஸ்களில் பிரயாணிகளை ஏற்ற மறுக்கிறார்கள் இதனால் பிரயாணிகள் காடுகளிலே இரவு நேரத்தைக் கழிக்க வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன, நாடு இக்கட்டான நிலையில் இருக்கும்போது இது பேராபத்தை விளைவிக்கக் கூடியது ஆகும் பஸ்கள் பிரயாணிகளை ஏற்றுவதற்கு இல்லையெனில் அவை வேறு யாருக்காக?

எனவே இந்த நிலையை சற்று ஆழ்ந்து யோசித்து உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்கள் என எதிர்பார்க்கிறோம்.

காரைநகர். — ஒரு பிரயாணி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

★ வர்ணப் புகைப்படப் பிரதி ஒன்று
ரூ. 5/- மட்டுமே!
★ ProcessingFree(நெகடிவ்செய்யஇலவசம்)
★ வர்ண புகைப்படச் சுருள்கள் விற்பனைக்கு
KODAK — FUJI — KONICA
SAKURA — FORTE — TUDOR
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23628

# உதயன்

25 - 03 - 1987 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது!
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதிகளை
★ கம்பியூட்டர் முறையில்
★ குறைந்த செலவில்
★ சிறந்த சேவையில்
பெற்றுக்கொள்ளலாம்.

## விசாரம்

'என்ன, தம்பி முரளி! விறுவிறு என்று நடந்து வாறீர்? விஷயம் ஏதாவது இருக்குதோ?

அட அதுதானே! புலிகள் பிடிச்ச சிப்பாய்களையும், பொலிஸ்காரரையும் பார்க்க ஆசையாய் இருக்கோ? ஏன் பேப்பர்களில் போட்டிருந்தது! நிதர்சனத்திலை நேரிலும் காட்டிச்சினம்; பார்க்கயில்லையே!

நாங்களும் ஆமி, பொலிஸ் எண்டா பெரிய ஆக்களாயிருப்பினம், ஆஜானுபாகுவான தோற்றத்தோடை இருப்பினம் எண்டுதான் கற்பனை பண்ணினது. இப்ப வல்லோ தெரியுது அரசாங்கம் செய்யிற அநியாயம்.

தவ்வலுகளிட்டை துப்பாக்கியைக் குடுத்து ஆமி, அதிரடிப்படை எண்டு பேர் சூட்டி இருக்கினம். பள்ளிக்கூடத்திலை படிக்க வேண்டிய வயசிலை படையாளராய் மாத்தி இருக்கினம்.

இஞ்சால எங்கடை பக்கத்திலைதான் விடுதலை வேட்கை காரணமாய் படிப்பைக் குழப்பிப் போட்டுச் சில தம்பிமார் போராளிகளாய் இருக்கினம் எண்டா, அவை அரசாங்கமும் குஞ்சு குருமன்களுக்கு யூனிபோமைப் போட்டுப் படையாக்கி இருக்கினம்.

இப்ப பார்த்தா, இரண்டு பக்கத்தாலையும் இளம் பிள்ளையள் அருமையான இளமையைப் பாழாக்க வேண்டிய நிலைமை தங்கடை இளமையை நல்லாப்படிச்சு, நல்லா உழைச்சு அனுபவிச்ச அரசாங்கத்திலை. அதுதான் ஆட்சியிலை உள்ள இழுதைச் செய்யிற வேலையாலைதானே உதெல்லாம். தங்கடை பதவி வெறியைத் தீர்க்க இரண்டு பக்க இளைஞரையும் மோதவிட்டு வேடிக்கை பார்க்கினம்.

இனப் பிரச்சினையை நல்ல மனதோடை நியாயமாய் தீத்தா ஏன் உந்த இளம்பிள்ளையள் வீணாய் போராடிச் சாகவேணும்.

சுதந்திரப் போராட்டத்திலை இளைஞர்கள் குதித்ததாலை எங்கடை சந்ததியிலை இடையிலை பெரிய வெளி வரப்போகுதே எண்டு நான் சதா கவலைப்படுவது உண்டு. ஆனால் அங்கை தெற்காலையும் அப்பிடி ஒரு இடைவெளி வரத்தானே போகுது!

உந்தத் தாக்கம் தெரியாமல் ஆயிரம் ஆயிரமாய் சம்பளம் எண்டதும் அதுகளும் சட்டையைப் போட்டுக்கொண்டு வந்து இஞ்சை சாகுதுகள்.

இலங்கை நான் சிங்களவருக்கு ஒரு நாடு, அதன் இறைமையையும், சுதந்திரத்தையும் காப்பாற்ற வேணும் எண்டு பீத்திற வகுப்புவாதியளுக்கும் ஒவ்வொரு சிங்கள இளைஞனும் சாகச்சாக பெரிய சந்ததி இடைவெளி வரப்போகுது எண்டது விளங்கயில்லையே!

சனக் கூட்டுப்போச்சுது. அதுகளுக்குச் சோறு போடுறது கஷ்டம். அதனாலை இப்பிடி இஞ்சை கொண்டு வந்து அழியவிட்டா எதிர்கால நிலையானது பொருளாதாரக் கஷ்டம் வராது எண்டு சிலவேளை யோசிச்சினமோ!

எது எப்பிடி எண்டாலும் யு என் பி அரசு தமிழ் மக்களுக்கு மட்டும்தான் அநியாயம் செய்யுது எண்டு இல்லை தன்ரை சொந்த இனத்துக்கே அநியாயம் செய்யுது உந்தப் பாவமும், வினையும், கர்மமும் எங்கே போய் முடியுமோ! அட கடவுளே, உனக்குத் தான் வெளிச்சம் அப்பா!

ஆயுதத் தரகர்மாரும், கமிஷன் ஏஜண்டுகளும் உழைக்கவேணும் என்றதுக்காக, அரசாங்கம் நடத்திற அடாவடித்தனத்தாலை படையள் மட்டுமே சாகினம்? அப்பாவித் தமிழ்ச் சனமும் எல்லே சாகுதுகள்.

எப்பவும் பண வெறியும் பதவி வெறியும் தலைக்கேறினவை கண் கெட்டபிறகுதான் சூரிய நமஸ்காரம் செய்வினம்!

★ ★ ★

தன்ரை வடக்கிலையிருந்து ஒரு கடிதம் கொண்டோடியந்து.

அங்குள்ள நல்ல தண்ணிக் கிணறுகளிலை ஒன்று அதனைச் சூழ வாழும் மக்களின் தாகம் தீர்த்து வந்ததாம். ஆனால் சில விஷமிகள் அந்தத் தேவாமிர்தக் கிணற்றுக்குள் திராவகம் ஊற்றி நாசம் செய்துள்ளனராம்.

தாயைப் பழிச்சாலும் தண்ணியைப் பழியாதே எண்டு சொல்லி வைச்ச தமிழன் பரம்பரையிலை இப்பிடியும் திமிர் பிடிச்சவை இருக்கினம் பாத்தியே!

உவையளுக்கு மிளகும் பத்தும் தண்ணியிலை குடுத்தாலும் தகும்!

தொண்டேடி

# பல்கலைக்கழகத்துக்கு 4,520 பேர் தெரிவு

## ஏப்ரல் விடுமுறைக்கு முன் விவரங்கள் வெளியிடப்படும்

கொழும்பு, மார்ச் 25

அடுத்த பல்கலைக் கழகக் கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்படும் 4,520 மாணவரின் விவரங்கள் ஏப்ரல் மாத விடுமுறைக்கு முன்னர் வெளியிடப்படும்.

எந்தப்பல்கலைக் கழகத்திற்கு, எந்தப் பிரிவிற்கு என்ன அடிப்படையில் மாணவர் தெரிவு செய்யப்பட்டார் என்பன போன்ற விவரங்கள் அப்போது வெளியிடப்படும்.

ஜீ சி ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகளின் படி 24,400 பேர் பல்கலைக்கழக அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களின் 16,879 பேர் மட்டுமே பல்கலைக் கழக அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களின் 4,520 பேர் மட்டுமே பல்கலைக் கழக அனுமதி பெறுவர்.

தொழில் நுட்பக்கல்லூரிப் பரீட்சை முடிவுகளும் விரைவில் வெளியிடப்படும்.

உயர்கல்வி அமைச்சுச் செயலாளரும் பல்கலைக் கழக மானியக் குழுத் தலைவருமான டாக்டர் ஸ்டான்லி கல்பகே நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் முன் கண்ட தகவல்களை வெளியிட்டார். (இ-எ)

## இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு
# கப்பல்களில் உணவுப் பொருள் வரும் செய்திக்கு இலங்கை மறுப்பு

கொழும்பு, மார்ச் 25

8 கப்பல்களில் உணவுப் பொருள்களை எந்த நேரத்திலும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்க இந்தியா தயாராக உள்ளது என்று சிங்கள நாளிதழான 'திவயின' வெளியிட்ட செய்தியை இலங்கை அரசாங்கம் மறுத்திருக்கிறது.

இலங்கை அரசின் மறுப்பு இலங்கை வானொலியின் சிங்களச் சேவையில் அடிக்கடி ஒலிபரப்பப்பட்டது.

இதுபோன்ற செய்திகள் சிங்கள மக்கள் மத்தியில் அமைதியின்மையை ஏற்படுத்துவதுடன், இரண்டு நாடுகளின் உறவுகளையும் பாதிக்கும் என்று இலங்கை அரசு விடுத்த மறுப்பில் கூறப்பட்டிருந்தது:

'இந்தியக் கப்பல்கள் உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் வருகின்றன' - என்று இலங்கை அரசுக்குத் தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

—இப்படி அரசின் மறுப்பு அறிக்கை மேலும் தெரிவித்தது (இ-எ)

## அரிசிக் கப்பல் வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், மார்ச் 25

'மத்துரட்ட' என்னும் கப்பலில் ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி காங்கேசன்துறைக்கு நேற்று வந்து சேர்ந்தது.

ஏற்கனவே வந்துள்ள 'பெந்தோட்ட' கப்பலிலிருந்து ஆயிரம் மெற்றிக் தொன் மாவை இறக்கும் வேலைகள் முடிந்ததும் அரிசி இறக்கும் வேலைகள் ஆரம்பமாகும் என்று உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ். பற்குணம் உதயனுக்குத் தெரிவித்தார் (இ-எ)

## பொலீஸ் விடுதி தாக்குதல் குறித்து அவசர மாநாடு

கொழும்பு, மார்ச் 25

பண்ணை பொலீஸ் விடுதிமீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் குறித்து கொழும்பில் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் அவசர மாநாடு ஒன்றை கடந்த திங்கட்கிழமை நடத்தினர்

இத் தாக்குதலில் தமிழீழ விடுதலைப் புலிகள் பல சிப்பாய்களைக் கொன்று எட்டுப்பேரைக் கைது செய்தது தெரிந்ததே.

பாதுகாப்பு உயர் அதிகாரிகள் நீண்ட நேரமாக பண்ணைத் தாக்குதல் பற்றி விரிவாக ஆராய்ந்தனர்

இணைத் தொடர்ந்து கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்க தலைமையில் உயர் அதிகாரிகள் குழு ஒன்று விசேஷ விமானம் மூலம் பலாலி வந்து விசாரணைகளை நடத்தியது

திங்கள் நண்பகல்வரை பண்ணைதீவில் ஹெலிக்கொப்டர்கள் எதுவும் தரை இறங்கவில்லை. யாழ் கோட்டை முகாமில் உள்ள வைத்திய அதிகாரிகளே காயம் அடைந்தவர்களுக்கு சிகிச்சை அளித்தனர் என்று தெரிகின்றது (இ-எ)

## அரசின் செய்தி எப்படி?

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்ட ஐந்து சிப்பாய்களையும் மூன்று அதிரடிப்படையினரையும் கண்டு பிடிக்க சிப்பாய்கள் பலத்த தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளனர்.

தேடுதல் வேட்டையின் போது பாதுகாப்பு படையினருக்கு உதவியாக ஹெலிக்கொப்டர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு நேற்று அரசு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

## டிசம்பர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு ஜே. என். டிக்ஸிற் இணை அமைச்சர் நட்வர்சிங்கையும் வெளியுறவுச் செயலாளர் கே பி எஸ். மேனனையும் சந்தித்து இலங்கை நிலைமை பற்றி விளக்கிச் சொன்னார். (இ-எ)

## கல்வி டிப்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

யும் திட்டமிட்ட நேரத்துக்குச் செய்ய முடிவதில்லை.

நாம் கொழும்பில் நடைபெறும் படிப்பு சம்பந்தமான நடைமுறைகளில் பங்குபற்ற முடியாத நிலையில் உள்ளோம்.

எனவே படிப்பு சம்பந்தமான விரிவுரைகள், கருத்தரங்குகள் யாவும் யாழ்ப்பாணத்தில் நடைபெற வேண்டும்.

இப்படிக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. (இ-20)

## பெரும் - - -

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

றில் பெரும் சாதனை புரிந்தவர் விக்ரர்.

விக்ரரின் இடத்துக்கு நியமிக்கப்பட்ட தளபதி ராதா யாழ். பண்ணை பொலீஸ் விடுதி மீது நடத்தப்பட்ட தாக்குதலில் தளபதி கிட்டுவுடன் இணைந்து செயற்பட்டார்.

தளபதி ராதா மேலும் சொன்னதாவது:-

எதிரியின் ஆயுதங்களைப் பறித்தே சிப்பாய்களை அடிபணிய வைத்தோம்.

இத் தாக்குதலில் நாம் பயன்படுத்திய ஆயுதங்கள் மிகமிகக் குறைவாகும்.

எமது வெற்றுத் தோட்டாக்களை மட்டுமே எதிரியின் குகைக்குள் விட்டு வந்தோம்

அங்கிருந்த எதிரியின் சகல ஆயுதங்களையும் நாம் கைப்பற்றினோம்

இப்படித் தளபதி ராதா மேலும் சொன்னார். (அ-10)

## முல்லைத்தீவில் சிப்பாய்கள் வாபஸ்

முள்ளியவளை மார்ச் 25

கடந்த திங்கட்கிழமை யாழ் பண்ணை பொலீஸ் விடுதி மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்து முல்லைத்தீவு ஆஸ்பத்திரிச் சந்தியில் இருந்தும் மற்றொரு சென்றியில் இருந்தும் சிப்பாய்கள் வாபஸாகி முகாமுக்குச் சென்றிருப்பதாகத் தெரிகின்றது (இ-93)

## ★ தொல்லை தரும் தொலைபேசி அழைப்புகள்

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ் நகர அலுவலகங்களுக்கு அடிக்கடி தொல்லை தரும் (நியுசென்ஸ்) ரெலிபோன் அழைப்புக்கள் வருகின்றன

சிங்கள மொழியில் ரெலிபோனில் தொடர்பு கொள்பவர்கள் 'உங்களுக்கு சிங்களம் தெரியுமா?' 'கொட்டியா உண்டா?' 'நிலைமை எப்படி?' 'சேதம் எப்படி?' 'ஸ்கோர் என்ன?' என்று சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் கேட்கிறார்களாம். (இ-எ)

## பாகிஸ்தான் வெற்றி

நாக்பூர், மார்ச் 25

நேற்று நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி இந்தியாவைத் தோற்கடித்தது

இதன்மூலம் இந்த கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான் வெற்றிக்கு வழி அமைத்தது.

நேற்றைய போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 44 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 286 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து ஆடிய இந்திய அணி 241 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதுவரை நடந்து முடிந்த ஐந்து போட்டிகளில் பாகிஸ்தான் 4 போட்டிகளிலும் இந்தியா ஒரு போட்டியிலும் வெற்றி பெற்றன.

இன்னும் ஒரு போட்டி மட்டுமே நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது (இ-7)

# வடபகுதி விவசாயிகளுக்கு உதவப் புதிய திட்டம்

## நிதி நிறுவனம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 25

வட பகுதி விவசாயிகள் தங்கள் விளை பொருள்களைச் சந்தைப் படுத்துவதில் எதிர் நோக்கும் நெருக்கடிகளை தவிர்க்கும் வகையில் பல திட்டங்களை நடைமுறைப் படுத்தப் போவதாக ஹோம் பினான்ஸ் நிறுவனம் அறிவித்திருக்கிறது.

நேற்று நிறுவனத்தின் கணக்காளர் திரு. என். ஸ்ரீஸ்கந்தராஜா யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

நிறுவனத்தின் யாழ்ப்பாணக்கிளை முகாமையாளர் திரு.டி. செல்லக்கண்டு, கணக்காளர்திரு. எஸ் வைத்தீஸ்வரன் அபிவிருத்தி அதிகாரி திரு.எஸ். மகேஸ்வரன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

நேற்றைய செய்தியாளர் சந்திப்பில் திரு.என். ஸ்ரீஸ்கந்தராஜா தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களின் நலனில் அதிக அக்கறையுடன் பல செயற்திட்டங்களை எமது நிறுவனம் செயற்படுத்த இருக்கிறது.

வடபகுதி விவசாயிகள் தமது விளை பொருள்களை சந்தைப்படுத்துவதற்கு அல்லலுறுகின்றனர். இதனைத் தவிர்க்க புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் படி தமது விளைபொருளை விவசாயி ஒருவர் எம்மிடம் ஒப்படைத்தவுடன் அதன் பெறுமதியில் 60 சதவீதம் அவருக்கு பணமாக வழங்கப்படும்.

பின்னர் விளைபொருளை நாங்களே உடனடியாக கொழும்பிலோ, பிறவிடங்களிலோ சந்தைப் படுத்துவோம். எமக்குரிய சிறியளவு தரகர் தொகையாகக் கழித்துக் கொண்டு மிகுதிப்பணம் சம்பந்தப்பட்ட விவசாயிக்கு வழங்கப்படும்.

இந்தப் பணத்தில் விவசாயிகள் இரும்பிநாசினிகள், பசளைகள் போன்றவற்றைப் பெறுவதற்கும் வசதி செய்து கொடுக்கப்படும்.

வடபகுதி மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு "சுப்பர் மார்க்கெட்" ஒன்றையும் அமைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

காசோலைகளைப் பணமாக மாற்றுவதில் பல சிக்கல்களை மக்கள் எதிர்நோக்கும் இவ்வேளையில் பெருந்தொகையான காசோலைகளை நாம் மக்களுக்கு தினமும் பணமாக மாற்றிக் கொடுத்து வருகிறோம்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றிற்கு கடன் அடிப்படையில் துணி வகைகளை விநியோகித்து வருகிறோம். இந்த நடவடிக்கைகள் மேலும் விரிவு படுத்தப்படும்.

எமது வாடிக்கையாளர்கள் கடன் அட்டைக்கு (Credit Card) கடைகளில் பொருள்களை கொள்வனவு செய்யக் கூடிய ஒரு திட்டத்தையும் விரைவில் நாம் செயற் படுத்துவோம்.

இத்தகைய வழியில் தமிழ் மக்களுக்கு சேவையாற்றி வரும் - சேவையாற்றத் திட்டமிட்டிருக்கும் - எமது நிறுவனத்துக்கு எதிராக தவறான அபிப்பிராயங்கள் பல கிளப்பப் பட்டிருப்பது வருந்தத் தக்கது.

-இப்படி அவர் கூறினார். (க)

## வேம்படி - - -

(10 பக்கத் தொடர்ச்சி)

கட்டடங்கள், உபகரணங்கள் சேதமடைந்தன என்று கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

கல்லூரி அதிபரின் வாசஸ்தலம், தம்பையா கட்டடம், சிறுவர் பாடசாலை என்பவற்றை ஷெல் குண்டுகள் பதம் பார்த்திருந்தன.

அதிபர் விடுதி சேதமடைந்தபோது அதிபர் அங்கே இருந்தார்; இருந்தும் எவ்வித காயமும் இன்றி தெய்வாதீனமாகத் தப்பினார்.

கல்லூரியின் சேதங்களை அரச அதிபர், யாழ் பிரஜைகள் குழுத் தலைவர், கல்வி அதிகாரிகள் சென்று பார்வையிட்டனர்.

நேற்று பாடசாலைக்குத் துணிவுடன் வந்த மாணவிகளைப் பலரும் பாராட்டினர்

ஒரு மாணவியிடம் 'உங்களுக்கு பயமில்லையா?' என்று கேட்டபோது 'பயம் இல்லை கவலையாகவுள்ளது' என்றார்-

நாம் நாட்டிய நிகழ்ச்சிகள் மூலம் நாடு முழுவதும் சதம் சதமாகச் சேகரித்து 8 லட்சம் ரூபா செலவில் கட்டிய தம்பையா நினைவுக் கட்டடம் ஷெல்லடிக்குச் சேதமாகிவிட்டது' என்று அந்த மாணவி சொன்னார். (இ-எ)

வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

41 ஆம் நாள்
## அந்தியேட்டி வைபவ அழைப்பிதழும் நன்றி நவிலலும்



### வைத்திலிங்கம் வசீகரன்

(வீரவேங்கை லெப்டினன்ட் சித்தார்த்தன்)

| | |
|---|---|
| அன்னையின் மடியில் | தாயகத்தின் மண்ணில்: |
| 09-02-1957 | 14-02-1987 |

வல்வினையும் வளமுறை வல்லை நகர்ப் பிறந்தோன்!
நல்வயித்தி லிங்கப் பெரியோன் மகனாகி யுவந்தோன்!
கல்வியைப் புகழ் "ஹாட்லி" தனில் கற்று உயர்ந்தோன்!
செல்வி வாணி அருள் தேடி யாழ் இந்துவையுஞ் சென்றடைந்தோன்!
பாரே அதிர்ந்திடப் பாரிய தாக்குதல் நிகழ்ந்திட இருந்தது!
கோரம் நடந்திடக் கொடுவிபத்தாகக் குவலயம் அதிர்ந்தது!!
தீரன் இவனுயிர் தீக்கிழ்ம்பிடியிற் காயமில் உதிர்ந்தது!
நீளுய் ஆன நிமலன் இவனும் நீளுலகில் தமிழோர நிமிர்ந்தது!!

அன்னாரின் இறுதிச்சடங்கில் பங்குபற்றியும் பல விதத்திலும் உதவிய அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். மேலும் 26-03-87 வியாழக்கிழமை நடைபெறும் அந்தியேட்டி கிரியைகள் யாவற்றிலும் கலந்துகொள்ளுமாறு உறவினரையும், நண்பர்களையும் சகதோழர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்

இங்ஙனம்
தந்தை, சகோதரர்கள், உறவினர்கள்

183, குருசோ வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

வடக்கின் மிகப் பிரபல்யமான
பாடசாலை கிரிக்கெட் வீரர் தெரிவு 1987
உதயன் நிறுவனத்தின் ஆதரவோடு
யாழ் ஜொலிஸ்ராஸ் யியன்ஸ்
விளையாட்டுக் கழகங்கள் இணைந்து நடத்தும்
மிகப் பிரபல்யமான
கிரிக்கெட் வீரரை வாசகர்கள்
தெரிவு செய்யும் போட்டி
வீரரின் பெயர் ____________
கல்லூரி ____________
வாக்காளர் பெயர் ____________
விலாசம் ____________
ஒப்பம் ____________



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி 25 - 03 - 1987 தொலைபேசி இல. 24305, 23075

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office. Under Number QJ / 94 /N /87. Telephone. 24305. 23075

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org